2015 ஆகஸ்ட் 27]

வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூபாய் 6.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். காட்டுமன்னார்கோவில் நகரில் அமைந்திருக்கிற கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

159—

புதிய திருத்தேர்

***39087—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், கரியாப்பட்டிணத்திலுள்ள அருள்மிகு சந்தனமாரியம்மன் திருக்கோயிலுக்குப் புதிய திருத்தேர் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகின்ற தெய்வம், என்னை வாழ வைக்கும் தெய்வம், எங்கள் குல தெய்வம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, என்னுடைய விடையைத் தொடங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், கரியாப்பட்டிணத்திலுள்ள அருள்மிகு சந்தனமாரியம்மன் திருக்கோயிலுக்குப் போதுமான வருவாய் மற்றும் நிதி வசதி

ஏதுமில்லாத நிலையில், அரசு நிதியுதவி மற்றும் உபயதாரர்கள் நிதிமூலம் புதிய திருத்தேர் செய்ய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.*

திரு. என்.வி. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும் கொண்டு, நீதியின் பாதையில் மீண்டும் அருளாட்சி புரிந்திட (மேசையைத் தட்டும் ஒலி) அவதாரம் எடுத்து வந்த நீதி தேவதை எங்கள் அம்மா! உலகின் தலைசிறந்த புதுமைத் தாயாக, எவருக்கும் தோன்றாத இரக்கமிகு சிந்தனையாய், ஏழைத் தாய்மார்கள் தங்கள் பச்சிளங் குழந்தைகளுக்குப் பாலூட்ட தனியிடம் அமைக்க உத்தரவிட்டு, செயல்படுத்திய கருணைத் தாய் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் தொன்மைச் சின்னங்களாகிய கோயில்கள் ஒளி பெற வந்தவதரித்த ஏழரை கோடி தமிழர்களின் இதயங்களில் வாழும் ஒற்றைக் கோயில் எங்கள் அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) சோழர் காலத்தில் அறச்சாலைகளாய் செழித்தோங்கி நின்ற கோயில்கள் மீண்டும் பொலிவு பெற அன்னதானத் திட்டம் ஏற்படுத்தி, அகிலத்தின் பசிப்பிணி நீக்கி, பால் வார்த்த அறக்கடவுள் எங்கள் அம்மா! தொன்மைக் கோயில்கள்தோறும் குடமுழுக்குகள், கிராமப்புற நலிவுற்ற கோயில் திருப்பணிகளுக்கு ரூபாய் 50,000/-, திருக்கோயில் பணியாளர்களுக்குப் பணி நிரந்தரமும், பெருங்கோயில்களில் முப்பொழுதும் அன்னதானம், பூசாரிகளுக்கு நல வாரியம், அர்ச்சகர் வீட்டுப் பிள்ளைகளுக்குக் கல்வி, திருமண உதவித் திட்டம், புராதனக் கோயில்களுக்குத் திருத்தேர் அமைத்துத் தருதல் என்று 'படமாடக் கோயில் பகர்வற்கு பற்பலவாய்' அரசாட்சி செய்து வரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிவுடன் வணங்குகிறேன்.*

எனது தொகுதியில் வேதாரண்யம் வட்டம், கரியாப்பட்டிணம் கிராமத்தில் அருள்மிகு சந்தனமாரியம்மன் கோயிலில் 1957 முதல் 1997 வரை 40 ஆண்டுகள் மிகவும் சிறப்பாக தேர்த் திருவிழா நடைபெற்றது. கடந்த 18 ஆண்டுகளாக திருத்தேர்

சிதிலமடைந்துள்ளது. எனவே, புதிய திருத்தேர் அமைத்துத் தருமாறு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களையும், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலம் என்பது இந்து சமய அறநிலையத் துறைக்குப் பொற்காலம் என்பதனை நாடு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)*

(முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *அந்த வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன், திருத்தேர் திருப்பணிகளில் முந்தைய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டிருந்த இடர்ப்பாடுகளைக் கண்டறிந்து, மரத் தேர் சிற்பிகளின் ஊதியத்தை உயர்த்தியும், மரங்களுக்கான விலையை அதிகப்படுத்தியும் வழங்க உத்தரவிட்டதன் அடிப்படையில், அதன் பயனாக கடந்த நான்கு ஆண்டுகளில் 138 புதிய திருத்தேர்கள் திருப்பணி செய்யப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) திருத்தேரோட்டமும் நடத்தப்பட்டுள்ளது என்பதனை அவைக்குப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திருப்பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூபாய் 12.55 கோடியாகும் என்பதையும், எஞ்சியுள்ள 140 திருத்தேர்கள் விரைவில் சீரமைக்கப்பட உள்ளன என்பதையும் பெருமையோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வேதாரண்யத்தைப் பொறுத்தவரை, கரியாப்பட்டிணம் அருள்மிகு சந்தனமாரியம்மன் திருக்கோயில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிறப்புத் திட்டமான ஒரு கால பூஜைத் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறும் திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலுக்கு ரூ.21 இலட்சத்தில் புதிய திருத்தேர் செய்வதற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.*

இத்திருக்கோயிலில் போதுமான நிதி வசதி இல்லாததால், அரசு நிதியுதவி ரூபாய் 10 இலட்சம் மற்றும் உபயதாரர்கள்மூலம் ரூ.11 இலட்சத்திற்குப் புதிய திருத்தேர் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண்கள் 160, 161, 162, 163, 164, 165 பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு : *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

(அ) சுற்றுச்சூழல் பாதுகாப்பினை செம்மைப்படுத்துதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள். (குறுக்கீடு) விதி 110-ன்கீழ் அறிவிப்பு முடியட்டும். பிறகு பார்க்கலாம்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் வளம் வன வளத்தில் அடங்கியுள்ளது. எனவே, எனது தலைமையிலான அரசு, வன வளம் மற்றும் பசுமைப் போர்வையினைப் பாதுகாப்பதிலும், வன உயிரினங்களிடம் இருந்து மனிதர்களைக் காப்பதிலும், தமிழக மக்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பினை வழங்குவதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதனை மேலும் செம்மைப்படுத்தும் வகையில், பின்வரும் அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்:*

1. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மாமிச உண்ணிகள், யானைகள், காட்டு மாடுகள், காட்டுப் பன்றிகள் மற்றும் கரடிகளால் மனித-வன உயிரின மோதல்கள் தொடர்பான நிகழ்வுகள் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. அத்தகைய மோதல்